# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை - 2022

| தரம் - 7 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

**பகுதி - I**

- **இவ்வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதவும்.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. “எங்கள் ஆழி இறைவனைக் காண வந்தேன்” இங்கு **ஆழி** என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
1) குளம் 2) கடல் 3) பொய்கை 4) தடாகம்

02. நாம் நினைப்பவற்றை **மனதில்** உயர்ந்தவையாக நினைக்க வேண்டும். இங்கு **மனம்** என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
1) இதயம் 2) உள்ளம் 3) உடல் 4) தலை

03. மாணவர்கள் **உற்சாகத்துடன்** பாடசாலைக்கு வந்தனர். இங்கு **உற்சாகம்** என்பதன் எதிர்ச்சொல்.
1) துக்கம் 2) கவலை 3) சோர்வு 4) தோல்வி

04. சூரியன் கிழக்கு வானில் உதித்தது. இங்கு **உதித்தது** என்பதன் எதிர்ச்சொல்.
1) தோன்றியது 2) மறைந்தது 3) உதயம் 4) தொலைவு

05. சேவல் கூவியது. இங்கு **சேவல்** என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1) பேடு 2) கலை 3) பறவை 4) பிடி

06. “அறம் செய்ய விரும்பு” இங்கு வந்துள்ள எழுவாய்,
1) செய்ய 2) அறம் 3) நீ 4) விரும்பு

07. யாம் ஐவேம் என்ற பாடலின் ஆசிரியர் யார்?
1) கா.மாணிக்கவாசகர் 2) கவிஞர் அழகசுந்தரதேசிகா
3) பாரதிதாசன் 4) பேராசிரியர் சோதி

08. ஆறானது மலைநாடு காடு சமவெளி அணைகள் என்பவற்றைக் கடந்து வந்தது. இங்கு பயன்படுத்தப்படும் நிறுத்தக் குறியீடு?
1) முற்றுப்புள்ளி 2) மெய்ப்பாட்டுக்குறி 3) முக்காற்புள்ளி 4) காற்புள்ளி

09. ஆற்று நீர் சலசல என ஓடியது. இங்கு சலசல என்பது.
1) இணைமொழி 2) இரட்டைக்கிளவி 3) அடுக்குமொழி 4) அடுக்கிடுக்குமொழி

10. ஆற்றங்கரை மரம் நன்றாக வளர்ந்திருந்தது. இவ் வாக்கியத்தில் காணப்படும் பயனிலை அடைமொழி
1) ஆற்றங்கரை 2) நன்றாக 3) மரம் 4) வளர்ந்திருந்தது

11. பின்வருவனவற்றுள் காலப்பெயர் அல்லாதது
1) மார்கழி 2) இனிமை 3) திங்கள் 4) தை

12. எதனையும் அளவோடு செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும் பழமொழி,
1) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் 2) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
3) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு 4) கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு

13. வண்ண மலர்கள் எல்லாம் சிரித்தன. இங்கு வந்த பெயரடை.
1) வண்ண 2) மலர்கள் 3) எல்லாம் 4) சிரித்தன

14. நானும் தம்பியும் கோயிலுக்குச் சென்றோம். இதில் வந்துள்ள இடைச்சொல்,
1) தம்பி 2) உம் 3) நான் 4) குச்

15. உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 30 2) 247 3) 216 4) 12

16. உறவு முறைக் கடிதமொன்றின் உறுப்புக்களின் எண்ணிக்கை
1) 7 2) 5 3) 6 4) 8

17. உயிர்க் குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 12 2) 5 3) 7 4) 30

18. ஐயோ! இப்படி ஆகிவிட்டதே. இது எவ்வகை குறி?
1) வியப்புக்குறி 2) முற்றுப்புள்ளி 3) காற்புள்ளி 4) முக்காற்புள்ளி

19. பெற்றோர் விழாவை ..........................................
1) இரசித்தது 2) இரசித்தனர் 3) இரசித்தன 4) இரசிக்க செய்தனர்

20. தந்தை மகளுடன் ....................................
1) வந்தது 2) வந்தாள் 3) வந்தனர் 4) வந்தார்

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
சுற்றுப்புறச்சூழல் பேணுவோம்
நீர் விரும்பும் பெரியார்
ஒழுக்கம் விழுப்பம் தரும்
உடைந்த குடையின் சுயசரிதை

(18 புள்ளிகள்)

**02.** ஒரு மனிதனின் ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான விடயங்களை கூட்டிக்காட்டி 75 சொற்களிற்கு குறையாமல் உமது நண்பனுக்கு கடிதம் எழுதுக.

(12 புள்ளிகள்)

**03.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. அந்தரே தன்னிடமுள்ளவை மூன்று பணியாரங்கள் என்பதை எவ்வாறு நிரூபித்தான்?
02. அந்தரே திருமண வீட்டில் எவ்வாறு நடந்து கொண்டான்?
03. ஆறு சென்றுவந்த மூன்று இடங்களை தருக.
04. ஆறு தான் எங்கே தவழ்ந்து வந்ததாகக் கூறுகின்றது?
05. கடமை என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்? எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?
06. மனிதனுக்குள்ள தலையாய கடமை எது?
07. காட்டில் காணக்கூடிய மூன்று காட்சிகளை எழுதுக.
08. காட்டு விலங்குகளைக் காப்போம் என்ற பாடத்தில் குறிப்பிடப்படும் ஐந்து மிருகங்களின் பெயர்களையும் அவற்றின் பண்புகளையும் குறிப்பிடுக.
09. யாம் ஐவேம் என்ற பாடத்தில் குறிப்பிடப்படும் சிறுமியின் பெயர் யாது? வயது எத்தனை?
10. சிறைச்சாலையில் காந்தியடிகளுக்கு கொடுக்கப்பட்ட வசதிகள் 4 தருக.

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**04.** பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. அரை -
2. வழி -
3. தண்மை -
4. அறம் -
5. தொண்டு -

(5x2 = 10 புள்ளிகள்)

**05.** பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.

தொல்காப்பியர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பிரிவாக பிரித்து நானிலம் என்று குறிப்பிட்டார். இதில் காடும் காடு சார்ந்த இடமும் முல்லையாகும். வானளாவ உயர்ந்த மரங்களும் செடி கொடிகளும் மலைகளும் காடுகளும் வற்றாது ஓடி வளம் பெருக்கும் ஆறுகளும் இயற்கை வளங்களாகும். செயற்கைப் பொருள்கள் மனிதத் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும். இயற்கை கண்களை ஈர்த்துக் களிப்படையச் செய்யும்; கவலைகளை மறக்க வைக்கும்; மனித மனதை மாண்புறச் செய்யும். முள்ளும் புதரும் நிறைந்த, மரங்களடர்ந்த, எங்கும் இருள் சூழ்ந்த காடுகள் கண்களுக்கு குளிர்ச்சியாய் இருப்பினும், சில பறவைகளின் ஒலியும் விலங்குகளின் ஆரவாரமும் அச்சத்தை தருவனவாய் இருக்கும்.

01. தொல்காப்பியர் நிலத்தை எத்தனை பிரிவாக பிரித்தார்? அவை எவை?

02. முல்லை நிலம் எது சார்ந்ததாக கூறப்படுகிறது?

03. இயற்கை வளங்கள் 4 தருக.

04. மனித தேவைகளை மட்டுமே நிறைவு செய்வது எது?

05. இயற்கையினால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

(5x2 = 10 புள்ளிகள்)